
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1272

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## மாநாடு

ர.பிரகாசு

125

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

ஓவியம் : சிகரன்




# எதிர்ப்புகளை வரவேற்கிறோம்!

‘1927-இல் பிரிட்டன் அரசால் அமைக்கப்பட்ட, ‘சைமன் கமிஷனில்’ இந்தியர்கள் யாரும் இல்லை’ என எதிர்த்தது, காங்கிரஸ் கட்சி. ஆனால், பெரியாரும் அம்பேத்கரும் ‘சைமன் கமிஷனை’ ஆதரித்தனர். ‘பார்ப்பனரல்லாத மக்களுக்கு, பிரிட்டன் அரசுமூலமே சில நன்மைகளாவது கிடைக்கும்’ என்று தீர்க்கமாக நம்பினார் பெரியார். 1930 மே 27 அன்று, ‘சைமன் கமிஷன் அறிக்கை’ வெளியானபோது, அதற்கான அறிகுறிகள் தென்பட்டன.

29.06.1930 அன்று நடைபெற்ற, ‘லால்குடி தாலுகா 2-வது சுயமரியாதை மாநாட்டில்’, ‘சைமன் கமிஷன் அறிக்கை’ குறித்து வைக்கப்பட்ட கருத்துகள் அதை உறுதிப்படுத்துகின்றன. லால்குடியில் இருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள நகர் பகுதியில் இம்மாநாடு நடைபெற்றது. மாநாட்டுத் தலைவர் முருகப்பர், பெரியார், மரகதவல்லி, இராம சுப்பிரமணியம் உள்ளிட்டோர், திருச்சியில் இருந்து சாலை மார்க்கமாக வாகனத்தில் லால்குடிக்கு அழைத்து வரப்பட்டனர். மாநாடு நடைபெற்ற நகர் பகுதிக்கு 2 மைல் தொலைவுக்கு அப்பாலேயே, பெரியாரை வரவேற்கப் பெரும்படை திரண்டு நின்றது. அங்கிருந்து மாலை சூட்டி, மேள தாளங்களுடன் மாநாட்டுக் கொட்டகைக்கு தலைவர்கள் அழைத்துவரப்பட்டனர்.

லால்குடி, சிறுகனூர், பூவாளூர், கோமங்குடி, அன்பில், நொச்சியம், திருவானைக்காவல், ஸ்ரீரங்கம், திருச்சி, முசிறி உள்ளிட்ட சுற்று வட்டாரப் பகுதிகளில் இருந்து இரண்டாயிரத்திற்கும் அதிகமானோர் வருகைதந்திருந்தனர். நெருக்கியடித்து அமர்ந்து, மாநாட்டுக் கொட்டகை நிரம்பியிருந்தது. உள்ளூர் பிரமுகர்கள், முக்கிய நிர்வாகிகள் மட்டுமின்றி, வாலிபர் சங்கத்தினர், ‘தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தினர்’, ‘நாயர் வாசகர் சாலை’, ‘தியாகராயர் வாசகர் சாலை’, ‘பனகல் அரசர் வாசக சாலை’, ‘சீர்திருத்த சங்கம்’, ‘வரகனேரி சுயமரியாதைச் சங்கம்’ உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளும், திருவிழா போல மாநாட்டில் பங்கேற்க ஆர்வம் காட்டியிருந்தனர்.

மாநாடு தொடங்கியதும், 4, 5 வயதுள்ள இரண்டு பெண் குழந்தைகள், மாநாட்டின் நோக்கத்தை உரையாடல் வடிவில் விளக்கினர். அதன்பிறகு, 2 சிறுவர்கள் “வருக வருக” என்ற விருத்தப்பாவில் மாநாட்டுக்கு வருகைதந்த தலைவர்கள், பிரதிநிதிகள், தொண்டர்கள் அனைவரையும் வரவேற்றுப் பாடினர்.

வரவேற்புரை ஆற்றிய கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள், “இந்தியாவிலே இதுகாறும் எந்த இயக்கத்திற்கும் இல்லாத எதிர்ப்புகள், நம்முடைய இயக்கத்திற்குத் தோன்றியிருக்கின்றன. பணக்காரர்களாலும், பதவியாளர்களாலும், சைவர்களாலும், சாஸ்திரிகளாலும், சமயப்பித்து கொண்டவர்களாலும் இந்த இயக்கத்திற்குக் கிடைக்கின்ற எதிர்ப்பு கொஞ்ச நஞ்சமல்ல. இத்தகைய எதிர்ப்புகளை ஆவலோடு வரவேற்கிறோம். ‘சுயமரியாதை இயக்கம்’ இதுவரை அடைந்த வெற்றிக்கு, எதிர்ப்புகள்தான் பேராதரவாக இருந்தன” என்றார்.

மேலும், ‘சைமன் கமிஷன்’ குறித்தும் பேசிய அவர், “இந்திய மக்களின் கல்வி நிலை’, ‘வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம்’, ‘ஜஸ்டிஸ் கட்சி’ குறித்து நன்கு ஆராய்ந்து குறிப்பிட்டது போற்றுதற்குரியது. இந்த அறிக்கையை வரவேற்று, நன்றி கூறுவது நமது கடமை” என்றும் கூறினார்.

தலைமை உரையாற்றிய முருகப்பர், சுமார் ஒரு மணி நேரம் சுயமரியாதை இயக்கத்தின் பணிகளைப் பற்றிப் பேசினார். அதன்பிறகு ஒரு சீர்திருத்தத் திருமணத்தை, பெரியார் நடத்திவைத்தார். மதிய உணவுக்குப் பிறகு மீண்டும் 3.30 மணிக்கு மாநாடு தொடங்கியது. பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மீண்டும், மாநாட்டுத் தலைவர் முருகப்பர் உரையாற்றினார். இறுதியில், பெரியார் நிறைவுரையுடன், இரவு 7.30 மணிக்கு மாநாடு கலைந்தது.

...கூட்டம் திரளும்

## ‘நீட்’ தேர்வுக்கு முன்னர்...

‘நீட் தேர்வு ரத்து’ என்கிற கோரிக்கையில், தி.மு.க.வின் போராட்டத்தை அறிய விரும்பாதவர்கள், இப்போது ‘தி.மு.க. என்ன செய்தது’ என எழுப்பும் கேள்விக்கு, ஆர்.பிரபு என்பவர் முகநூலில் எழுதியுள்ள பதிவு.

“20 ஆண்டுகளுக்கு முன், தமிழ்நாட்டில் மாநில அளவில் நீட் (NEET) போலவே டி.என்.பி.சி. (TNPCEE) என்னும் நுழைவுத்தேர்வு இருந்தது. அதன் அடிப்படையில்தான் மருத்துவப் பொறியியல் கல்லூரிகள் சேர்க்கை நடந்தது என்று சொன்னால், இன்றைக்கு இருக்கும் ‘ஜென் சி’ (GENZ)-க்கு தெரியுமா என்றுகூட தெரியவில்லை. 2005-இல் முதன்முறை கலைஞர் ஆட்சிக்கு வந்தால், அந்த நுழைவுத்தேர்வை ரத்து செய்வோம் என்று சொன்னார். எங்கே, அந்தப் புகழ் அவருக்கு வந்துவிடுமோ என்று அவசர அவசரமாக ஒரு ஜி.ஓ. G.O. போட்டு, ஜெயலலிதா ஆட்சியின் இறுதி ஆண்டில் அந்த நுழைவுத்தேர்வினை ரத்து செய்தார். நீதிமன்றத்தால் அந்த ஆணை ரத்து செய்யப்பட்டது. கலைஞர் ஆட்சிக்கு வந்தார்.

முறையாக சட்டம் இயற்றி, சட்டமன்றத்தில் நிறைவேற்றி, 2006-ஆம் ஆண்டு அதை ரத்து செய்தார். 2016-ஆம் ஆண்டு வரை மருத்துவக் கல்லூரி இடங்கள் அந்தச் சட்டத்தினால்தான் 12 -ஆம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையில், மருத்துவச் சேர்க்கை நடைபெற்றது. அதாவது, ‘நீட் தேர்வு’க்கு முன் இருந்த முறை நல்லது என்று சொல்கிறார்களே அந்த முறை, வானத்தில் இருந்து குதிக்கவில்லை. அதுவே, தி.மு.க. கொண்டுவந்ததுதான்.

நுழைவுத்தேர்வை ரத்து செய்த ஒரு கட்சியைப் பார்த்து, நீதான் நுழைவுத்தேர்வுக்கு ஆதரவு கொடுத்தாய் என்பதும், நீட் தேர்வு ரகசியம் என்ன என்று FDFS பார்த்து முடித்துவிட்டு போகிற வழியில், கேள்வியைத் தூக்கி போட்டுவிட்டு பதிலுக்குக் காத்திருக்காமல் போவதும், நீட் தேர்வை ஒழிக்க வேண்டும் என்கிற அக்கறையினால் அல்ல. நீட் தேர்வை உண்மையாகவே ஒழிக்கப் பாடுபடும் இயக்கங்களை ஒழிக்க வேண்டும் என்பதற்காக” என்று குறிப்பிடுகிறார்.

## ஃப்ளாஷ்பேக்

### கழக உணர்வு என்றும் மாறாது!



1985-ஆம் ஆண்டு, எனது 27-வது வயதிலிருந்து கழகத்தில் உறுப்பினராக இணைந்து செயல்பட்டுவருகிறேன். தலைமைக் கழகம் ஆணையிடும் பல போராட்டங்களில் கலந்துகொண்டு சிறை சென்றுள்ளேன். சேலம் 26-வது வார்டு இளைஞர் அணி அமைப்பாளராகவும், நெசவாளர்கள் மற்றும் வணிகர் அணியில் செயல்பட்டு வந்துள்ளேன். இந்தப் படம், 1986-ஆம் ஆண்டில் நம் நெஞ்சமெல்லாம் நிறைந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை அண்ணா அறிவாலயத்தில் சந்தித்து எடுத்துக் கொண்ட படம். காலம் மாறலாம், காட்சி மாறலாம். ஆனால், தி.மு.க.கழகம் என்றும் எங்கள் குடும்பம் எனும் எண்ணம் மாறாது.



வி.பாபு

- வி.பாபு,
அரிசிப்பாளையம், சேலம் மாவட்டம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

125

**சுயமரியாதை - சமத்துவம் - சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# கடவுள்கள் தொலைந்த கதை!

கிரேக்கத் தொன்மக் காப்பியமான ஹோமரின் ‘ஒடிசி’யை அடிப்படையாகக் கொண்டு, புகழ்பெற்ற இயக்குநரான கிறிஸ்டோபர் நோலன் இயக்கிய ‘தி ஒடிசி’ திரைப்படம், அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. இந்தத் தருணத்தில் 1953-ஆம் ஆண்டு வெளியான பேரறிஞர் அண்ணாவின் ‘மாஜி கடவுள்கள்’ நூலை மீண்டும் எடுத்துப் படிப்பது, பொருத்தமான ஒன்றாக இருக்கும். ‘பாரி நிலையம்’ வெளியிட்டுள்ள நூலை, தமிழ் மின் நூலகத்தில் இலவசமாகப் படிக்கலாம்.

‘ஒன்றே குலம் ஒருவனே தேவன்’ என்பதுதான் தமிழர் நெறி - அவர்களின் ‘கடவுள் கொள்கை’ என்பதை வலியுறுத்தியவர் பேரறிஞர் அண்ணா. அத்தகைய வாதத்திற்கு வலுசேர்க்கும் பொருட்டு, கிரேக்கம், ரோம், பிரிட்டன், எகிப்து என மேற்குலகில் நாம் போற்றும் தெய்வங்களுக்குச் சற்றும் குறைவில்லாத சக்திகளையும் கிளைக் கதைகளையும் கொண்டிருந்த கடவுள்கள் இருந்ததை எடுத்துக்கூறி, காலப் போக்கில், மனிதர்களின் அறிவு வளர்ச்சியால் அவை எல்லாம் வீழ்ச்சியுற்று, ‘மாஜி கடவுள்கள்’ ஆகிப்போனதையும் இந்த நூலில் மிக விளக்கமாகப் பதிவு செய்துள்ளார் அண்ணா.




கடவுள்களைக் கேள்வி கேட்டால், நாடு கடத்தப்பட்டு, தூக்கில் பலியிடப்படும் காலம் இருந்ததைப் பல்வேறு உதாரணங்களுடன் கூறி, இன்றைக்குப் பகுத்தறியும் திறன் கொண்டு சிந்திக்கும் மக்கள், கேள்விகள் எழுப்பும் துணிச்சல் கொண்டவர்களாக இருப்பதையும் விளக்குகிறார்.

இந்த நூலில், கிரேக்கக் கடவுள்களின் புராணக் கதைகளைப் பல்வேறு தமிழ்க் கடவுள்களின் கதைகளுடன் இணைத்து வாசிக்க முடியும். கண்ணன், கந்தன், வருணன், வாயு, சூரியன், சந்திரன் போன்ற தெய்வக் கதைகளுடன், கிரேக்கக் கடவுளரின் கதைகள் ஒத்திருப்பதை, இந்நூலின் பல பகுதிகளில் அண்ணா கவனப்படுத்துகிறார்.

‘தந்தையைக் கொன்ற கடவுள்’, ‘தாயைத் - தங்கையைத் தாரமாக்கிக்கொண்ட கடவுள்’, ‘காம இச்சை பிடித்த கடவுள்’, ‘பஞ்சமா பாதகங்களை அஞ்சாது செய்த கடவுள்’ எனப் பல தன்மைகளுடன் ஆபாசமும் அபத்தமும் நிரம்பிய கடவுள் கதைகள், உலகம் முழுக்க இருந்ததையும் பிற்காலத்தில் இவை வெறும் கதைகளாகவும், சிற்பங்களாகவும், சின்னங்களாகவும் எஞ்சிப்போனதையும் தெளிவுற விளக்குகிறார் அண்ணா.

> **‘மேற்கத்திய கடவுள்கள்’ குறித்து விளக்கும் இந்நூலில், அவர்களின் சிற்பங்களும் ஓவியங்களும் இடம்பெற்றிருப்பது தனிச் சிறப்பு எனலாம்.**

‘மேற்கத்திய கடவுள்கள்’ குறித்து விளக்கும் இந்நூலில், அவர்களின் சிற்பங்களும் ஓவியங்களும் இடம்பெற்றிருப்பது தனிச் சிறப்பு எனலாம். இந்தக் கடவுள்கள் குறித்து ஹோமர் எழுதி இருக்கும் வரிகளை அடிக்கடி அண்ணா நினைவுகூர்வதன் மூலம், ‘இலியட் மற்றும் ஒடிசி’ ஆகிய காப்பியங்கள்கூட இந்நூலை எழுத உந்துதலாக அமைத்திருக்கலாம் என்ற எண்ணம் ஏற்படுகிறது.

மேற்கத்திய நாடுகளில், ஒரு காலத்தில் பெரும் செல்வாக்குடன் இருந்த கடவுள்கள் எல்லாம் இன்றைக்கு ஒன்றுமே இல்லாமல், ‘மாஜி கடவுள்கள்’ ஆகி இருப்பதைப் போன்ற நிலை, தமிழ்நாட்டிலும் மெல்ல மெல்ல ஏற்படும் என்ற நம்பிக்கையில், பேரறிஞர் அண்ணா எழுதிய இந்நூல், அவசியம் வாசிக்கப்படவேண்டிய ஒன்று.

...வாசிப்போம்.

## கருவூலம்

### போட்டியின்றி பொருளாளராக..

1960-ஆம் ஆண்டில், கழகத்தின் பொதுச்செயலாளராகப் பேரறிஞர் அண்ணா தேர்ந்தெடுக்கப்பட்டதும், கழகப் பொருளாளர் பதவிக்கு கலைஞர் அவர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். தலைமைக் கழகச் செயலாளராக கே.ஏ.மதியழகன், அமைப்புக் குழுச் செயலாளராக என்.விநடராசன் அவர்களும், பிரச்சாரக் குழுச் செயலாளராக நாவலர் அவர்களும் தொழிற்சங்கச் செயலாளராகப் பேராசிரியர் அவர்களும், கழக வெளியீட்டுச் செயலாளராக, சிபிசிற்றரசு அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900